***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXIII Code of Criminal Procedure)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT Mannargudi***
***CC.No. 28/2023 – P.W. 6***

| | |
|---|---|
| *Name* | சண்முகசுந்தரம் |
| *Husband's Name* | வெங்கடாச்சலம் |
| *Village* | கருணாவூர் |
| *Age* | 43 |

**எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச 311 பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சியை மீண்டும் அழைத்து எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார். எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 02.09.2025*

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் இதற்கு முன்னதாக நீதிமன்றத்தில் சாட்சியம் சங்கதிகள் குறித்து எனக்கு நியாபகம் உள்ளது என்றால்-சரிதான். வாசுகியின் கணவர் எனது ஊர்க்காரரர் ஆவார். 100 நாள் வேலை என்றால்-என் பணி குறித்தானஅட்டை எனக்கு வழங்கப்பட்டிருக்கும் என்றால்-சரிதான். போலிசார் என்னை விசாரணை செய்த போது எனது வேலை குறித்து விசாரித்து அட்டையை பார்த்தார்களா என்றால்-பார்த்தார்கள். போலிசார் என்னை விசாரித்தபோது சம்பவத்தின்போது சம்பவத்தை பார்த்த 25 நபர்கள் யார் யார் என்பது குறித்து போலிசார் விசாரித்தார்களா என்றால்-விசாரித்தார்கள்.

ஒம்/-திருமதி.ஆ.சீதாலெட்சுமி,
நீதித்துறை நடுவர் எண்.2,
மன்னார்குடி.